**<u>தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்</u>**

**செய்தி வெளியீட்டு எண்: 97/2025** **நாள்: 17.07.2025**

**<u>செய்திக்குறிப்பு</u>**

**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண் : 13/2024, நாள் 13.09.2024 மற்றும் பிற்சேர்க்கை எண். 13A/2024, நாள் 09.01.2025 -ன் வாயிலாக நேரடி நியமனத்திற்கு அறிவிக்கை வெளியிடப்பட்ட <u>அரசு உதவி வழக்கு நடத்துநர், நிலை-II</u> பதவிக்கான முதல்நிலைத் தேர்வு 22.02.2025 முற்பகல் நடைபெற்றது. இத்தேர்விற்கான முதன்மை எழுத்துத் தேர்வு (விரிந்துரைக்கும் வகை) 26.07.2025 முதல் 30.07.2025 வரை மு.ப மட்டும் நடைபெற உள்ளது.**

**தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு** (Hall Ticket) **தேர்வாணையத்தின் இணைய தளமான** [www.tnpsc.gov.in](http://www.tnpsc.gov.in) **மற்றும்** [www.tnpscexams.in](http://www.tnpscexams.in)**-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய ஒருமுறை பதிவேற்றம்** (OTR DASHBOARD) **மூலமாக மட்டுமே விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளீடு செய்து தேர்வுக்கூட நுழைவுச் சீட்டினை** (Hall Ticket) **பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.**

**அ. சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,**
**தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்**